# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No. 126/2016

2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் 21.08.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணம்மா | ஜாதி | : | |
| க /பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவருக்கு இரண்டு தாரம் என்றாலும், இரண்டாம் தாரருக்கு பிரேம்குமார் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். ( **பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்கண்ட சங்கதிகள் சொல்லப்படவில்லை என்று கூறி வாதி ஆட்சேபணை கூறுகிறார்)** அவர் என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரேம் குமார் 1 ம் பிரதிவாதி பிரகாஷ்க்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் திருவாரூரில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது என்று சொல்லிக்கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினை வழக்கில் பிரகாஷக்கு அலுமேலு ஏற்படுத்திக்கொடுத்த உயில் ஆவணம் செல்லத்தக்கது என்று தீர்வு காணப்பட்டது என்றால் சரியல்ல. அலமேலு அம்மாளுக்கு உயில் ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க எந்த அதிகாரம் இல்லை. அது போல மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 65/2014 என்ற வழக்கை பிரகாஷ் தாக்கல் செய்து அதில் உயில் ஆவணம் செல்லத்தக்கது என்று தீர்வு காணப்பட்டது என்றால் சொன்னார்கள் அதனால் தெரியும்.

இந்த வழக்கில் பிரேம்குமாரை தரப்பினராக சேர்க்காததற்கு ஏதேனும் காரணம் உண்டு என்றால் பிரேம் குமார் தாக்கல் செய்த வழக்கில் எங்களை தரப்பினராக சேர்க்காததால் நாங்களும் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை.

கிருஷ்ணமூர்த்தியின் வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அலமேலு அம்மாள் ஏற்படுத்திக்கொடுத்த உயில் ஆவணம் செல்லாது என்றுதான் நான் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். அலமேலு அம்மாள் அவர்களின் ஒரு மகன் செல்வம் என்பவர் இறந்துவிட்டார் அவருக்கு வாரிசு என்ற முறையில் செல்வத்தின் சொத்துக்களை பிரகாஷக்கு ஏற்படுத்திக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

இறந்த செல்வத்திற்கு அவரது தாயாரான அலமேலு அம்மாவை தவிர வேறு யாரும் வாரிசு கள் இல்லை என்றால் சரிதான். உங்கள் கணவர் கிருஷ்ணமூர்த்தி இறக்கும்போது அலமேலு

அம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அலமேலு அம்மாள் செல்வத்தின் சொத்துக்களை செட்டில்மெண்ட் ஆகவும் , எனது கணவரின் சொத்துக்களை வாரிசு என்ற முறையில் உயில் ஆவணமாகவும் எழுதிக்கொடுத்த ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்று கூறுகிறேனா என்றால் எனது கணவர் கிருஷ்ணமூர்த்தியின் தாத்தா அலமேலு அம்மாளுக்கு அனுபவிக்க மட்டும்மதான் உரிமை கொடுத்திருந்தார். அதனால் அதனை எழுதிக்கொடுப்பதற்கு உரிமை இல்லை. கிருஷ்ணமூர்த்தியின் தாத்தா சேவு வன்னியர் ஏற்படுத்திக்கொடுத்த பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் அவரவர்கள் அன்றைய தேதியிலே சுவாதீனம் என்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

அதன் அடிப்படையில் எனது கணவர் கிருஷ்ணமூர்த்தி அவருக்கு ஒதுக்கபட்ட சொத்துக்களை அனுபவவித்து வந்தார் என்றாலும், இறந்துபோன அவருக்கு ஒதுக்கபட்ட சொத்துக்களை அனுபவவித்து வந்தார் என்றாலும் சரிதான். 1952 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் அவரவர்கள் பிரித்து இன்றைய தேதிவரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அலமேலு அம்மாளுக்கு அந்த சொத்தினை அனுபவிக்க அனுமதி கொடுத்திருந்ததால் அனுபவிக்க மட்டும் முடியும் என்றும், ஆவணம் ஏற்படுத்த முடியாது என்று சொல்கிறேன் என்றால் சரிதான்.

இறந்து போன செல்வத்தின் வாரிசுதாரர்கள் என்ற முறையிலும், இறந்துபோன எனது கணவர் கிருஷ்ணமூர்த்தி வாரிசுதாரர் என்ற அடிப்படையிலும் செட்டில்மெண்ட் மற்றும் உயில் ஆவணம் குறித்து என்னால் சட்டப்பூர்வமாக கேள்விகள் எழுப்ப இயலாது என்றால் சரியல்ல.

என்னால் தாக்கல செய்யபட்டுள்ள அடிப்படை முகாந்திரம் அற்றது என்றாலும், நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.